family planning nsw
Reproductive & Sexual Health

# உண்மை அறியும் தாள்

## அறுவைசிகிச்சை மூலமான கருக்கலைப்பு அல்லது மருந்து மூலமான கருக்கலைப்பு – இவற்றிற்கிடையே என்ன வேறுபாடு உள்ளது?

| | அறுவைசிகிச்சை மூலமான கருக்கலைப்பு | மருந்து மூலமான கருக்கலைப்பு |
|---|---|---|
| **தேவையான பரிசோதனைகள்** | • இரத்தப் பரிசோதனை – முன்பு<br>• கால அளவீடு அல்ட்ராசவுண்ட் | • இரத்தப் பரிசோதனை – முன்னரும் பின்னரும்<br>• கால அளவீடு அல்ட்ராசவுண்ட் |
| **நேரம்** | • பொதுவாகக் கர்ப்பம் தரித்து 6 வாரங்களுக்குப் பிறகு செய்யப்படுகிறது<br>• கர்ப்பம் தரித்து 12 வாரங்களுக்குப் பிறகு, மிகவும் விலையுயர்ந்ததாகிறது | • கர்ப்பம் தரித்து 9 வாரங்களாவதற்கு முன்பு கட்டாயம் செய்யப்பட வேண்டும்<br>• பொதுவாக, கர்ப்பம் தரித்து 6 வாரங்களுக்குப் பிறகு செய்யப்படுகிறது |
| **செயல்முறை** | • இலேசான மயக்கமருந்து தேவைப்படுகிறது<br>• ஒரு நாள் அறுவைசிகிச்சை மருத்துவமனையில் அறுவைசிகிச்சை செயல்முறை<br>• செயல்முறைக்கு சுமார் 10 நிமிடங்கள் எடுக்கும்<br>• ஒரு நாள் அறுவைசிகிச்சை மருத்துவமனையில், இயல்புநிலைக்குத் திரும்பும் நேரம் 4 மணி நேரம் வரை<br>• சில நேரங்களில் 2 வாரங்கள் வரை இலேசான இரத்தப்போக்கு ஏற்படலாம் அல்லது இரத்தப்போக்கே ஏற்படாமல் போகலாம்<br>• நுண்ணுயிர்த் தடுப்பு மருந்துகள் (antibiotics) வழங்கப்படுகின்றன<br>• ஏதாவது சிக்கல்கள் அல்லது பிரச்சனைகள் இருந்தால் மட்டுமே பிற்தொடர்ச்சியான சந்திப்பு ஏற்பாடு செய்யப்படும் | • உங்கள் சொந்த வீட்டில் அல்லது பிற பாதுகாப்பான இடத்தில் உட்கொள்ளப்படும் மருந்துகள்<br>• முதல் சில மணி நேரத்திற்கு அடிவயிற்று வலி மற்றும் கடுமையான இரத்தப்போக்கு<br>• இலேசான இரத்தப்போக்கு பொதுவாக சுமார் 2 வாரங்கள் வரை நீடிக்கும், ஆனால் 6 வாரங்கள் வரை தொடரலாம்<br>• வலி நிவாரணம் மற்றும் வாந்தித் தடுப்பு மாத்திரைகள் பரிந்துரைக்கப்படுகின்றன<br>• கருக்கலைப்பு முடிந்துவிட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு பிற்தொடர்ச்சியான சந்திப்பு ஏற்பாடு தேவைப்படுகிறது |
| **ஆதரவுகள் மற்றும் நலம்பெறுதல்** | • ஒரு நாள் அறுவைசிகிச்சை மருத்துவமனையிலிருந்து உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்ல, உங்களுக்கு ஒரு பொறுப்பான வயதுவந்தவர் தேவைப்படுவார்<br>• செயல்முறைக்குப் பிறகு உங்களால் வாகனம் ஓட்ட முடியாமல் இருக்கும். | • மருந்துகளை உட்கொண்ட பிறகு, முதல் 24 மணி நேரத்திற்கு உங்களுக்கு உதவுவதற்கு ஒரு பொறுப்பான வயதுவந்தவர் தேவைப்படுவார் |
| **பக்க விளைவுகள்** | • மயக்கமருந்து கொடுத்திருப்பதால் சோர்வாக உணரலாம்<br>• இரத்தப்போக்கு மற்றும் இலேசான அடிவயிற்று வலி ஏற்படலாம் – பொதுவாக 2 வாரங்களுக்குக் குறைவாகவே நீடிக்கும் | • இரத்தப்போக்கும் அடிவயிற்று வலியும் எதிர்பார்க்கப்படுகின்றன<br>• காய்ச்சல், குளிர் நடுக்கம், குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவையும் ஏற்படலாம் |
| **சிக்கல்கள் / அபாயங்கள்** | • கருப்பை அல்லது கருப்பை வாய் படலத்தில் காயம்<br>• நோய்த்தொற்று<br>• கருப்பையில் துளை ஏற்படல் (ஒரு சிறிய துளை)<br>• மயக்கமருந்தின் எதிர்விளைவு | • கடுமையான இரத்தப்போக்கு<br>• நோய்த்தொற்று<br>• முழுமையடையாத கருக்கலைப்பு<br>• தொடரும் கர்ப்பம் |
| | • அறுவைசிகிச்சை மற்றும் மருந்து மூலமான கருக்கலைப்பு ஆகிய இரண்டிலும் உள்ள சிக்கல்கள் அரிதானவையே | |
| **FPNSW-இல் சேவை கிடைக்கக்கூடிய தன்மை** | • கர்ப்பம் தரித்து12 வாரங்கள் + 6 நாட்கள் வரையிலும் சாட்ஸ்வுட் (Chatswood)-இல் கிடைக்கிறது<br>• 2 சந்திப்புகள் தேவைப்படுகின்றன – மதிப்பீடு மற்றும் செயல்முறை | • அனைத்து FPNSW மருத்துவமனைகளிலும் கர்ப்பம் தரித்து 9 வாரங்கள் வரை கிடைக்கிறது<br>• 3 சந்திப்புகள் தேவைப்படுகின்றன – மதிப்பீடு, மருந்துப் பரிந்துரை மற்றும் பிற்தொடர்ச்சி |

## மேலும் தகவல்களுக்கு

**குடும்பக் கட்டுப்பாடு என்.எஸ்.டபிள்யூ டாக்லைன் (Family Planning NSW Talkline) –**
www.fpnsw.org.au/talkline அல்லது 1300 658 886

**தேசியத் தந்தி சேவை (காது கேளாதவர்களுக்கு) –**
13 36 77

**'டிஸ் நஷனல்' (TIS National) மொழிபெயர்ந்துரைப்பு சேவை –**
131 450

**உங்கள் அருகிலுள்ள 'குடும்பக் கட்டுப்பாடு என்.எஸ்.டபிள்யூ (NSW) மருத்துவமனை'-க்குச் செல்லவும் –** www.fpnsw.org.au/clinics

**குடும்பக் கட்டுப்பாடு என்.எஸ்.டபிள்யூ (NSW) சேவைபெறுநருக்கான உண்மை அறியும் தாள் –**
https://www.fpnsw.org.au/factsheets/individuals/cervical-screening/hpv-vaccination

**'குடும்பக் கட்டுப்பாடு என்.எஸ்.டபிள்யூ (NSW)' சேவைபெறுநருக்கான மூலஆதாரம் –**
https://www.fpnsw.org.au/changes



'குடும்பக் கட்டுப்பாடு என்.எஸ்.டபிள்யு' (Family Planning NSW) என்பது என்.எஸ்.டபிள்யு சுகாதார அமைச்சகத்தால் நிதியளிக்கப்படும் இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பாகும்

இந்த உண்மை அறியும் தாளில் உள்ள தகவல்கள், கல்வி நோக்கங்களுக்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. பிரசுரிக்கும் நேரத்தில் தகவல்கள் துல்லியமாகவும் புதுப்பிக்கப்பட்டதாகவும் உள்ளன என்பதை உறுதிப்படுத்த 'குடும்பக் கட்டுப்பாடு என்.எஸ்.டபிள்யு' (Family Planning NSW - FPNSW) எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துள்ளது. இது குறிப்பிட்ட மருத்துவ ஆலோசனையை வழங்குவதற்காகவோ அல்லது ஒரு சுகாதார நிபுணரின் தனிப்பட்ட ஆலோசனையை மாற்றுவதற்காகவோ வழங்கப்படவில்லை. பதிப்புரிமை @ FPNSW 2018. இந்த உண்மை அறியும் தாளை ஒப்புதல் இல்லாமல் மறுபதிப்பு செய்வதற்கு அனுமதியில்லை. மதிப்பாய்வு செய்யப்பட்டது: அக்டோபர் 2020